# தொண்டு நிறுவனத்தில் சிபிஐ திடீர் சோதனை

**மதுரை, ஜன. 9:** மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு, கடந்த 1985ல் தொடங்கப்பட்ட அறக்கட்டளையின் கீழ், தனியார் தொண்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த தொண்டு நிறுவனம் வெளிநாட்டு நன்கொடை மற்றும் பல்வேறு நன்கொடை மூலம் குழந்தைகள், முதியவர்கள், எச்ஐவி பாதித்த குழந்தைகள் ஆகியோருக்கு காப்பகங்களை நடத்தி சேவை செய்து வருகிறது. வெளிநாடுகளில் இருந்து நன்கொடை பெறும் தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் அதற்குரிய ஆவணங்களைக் காட்டி, உள்துறை அமைச்சகத்திடம் அனுமதி பெற வேண்டும்.

ஆனால், இந்த தொண்டு நிறுவனம் முறையாக அனுமதி பெறாமல், வெளிநாடுகளில் இருந்து நன்கொடை பெற்றதாக கடந்த 2012, 2014ம் ஆண்டுகளில் ஆய்வு செய்த உள்துறை அமைச்சக அதிகாரிகள், சிபிஐ விசாரிக்க அப்போது பரிந்துரை செய்தனர். இதன்படி, சிபிஐ விசாரணை மேற்கொண்டது. இந்நிலையில், கடந்த 2005-2006, 2010-2011 மற்றும் 2012-2013 ஆகிய ஆண்டுகளில், வெளிநாடுகளில் இருந்து உள்துறை அமைச்சக அனுமதி பெறாமல், தொண்டு நிறுவனம் நன்கொடை பெற்றுள்ளதாக, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 2 பிரிவுகளிலும், வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ், 6 பிரிவுகளிலும் சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக நேற்று மதுரையில் உள்ள தனியார் தொண்டு நிறுவனத்தில், 10க்கும் மேற்பட்ட சிபிஐ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு விசாரணை நடத்தினர். இதனால், பரபரப்பு ஏற்பட்டது.

தினகரன் Sun, 09 January 2022
https://epaper.dinakaran.com/c/65515804